# நான் விரும்பும் சமயகுரவர் திருநாவுக்கரசு நாயனார்

அகச் சமயங்களிலே தலையாய சமயம் சைவ சமயம். எஞ்ஞான்றும் இது நிலைத்து நிற்பதற்கு காரணம் தேவார திருவாசகங்கள் என்னும் தமிழ் வேதங்கள். இத்தமிழ் வேதங்களை இயற்றியவர்கள் எமது சமய குரவர்கள்.

சமய குரவர்களில் மிகவும் முதிர்ந்தவர் திருநாவுக்கரசு நாயனார். இவர் தமிழ்நாட்டின் திருமுனைப்பாடியிலுள்ள திருவாமூரிலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். குழந்தை பிறந்தபோது இவருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் மருணீக்கியார். இவருடைய இளவயதிலேயே தாய் தந்தையர் இறைவனடி சேர்ந்து விட்டதால் இவருடைய தமக்கையார் ஆன திலகவதியாரே இவரை வளர்த்து ஆளாக்கினார்.

இவர் புற சமயமாம் சமண சமயத்திலும் இவருக்கு புலமை உண்டு. இதனால் இவருக்கு தருமசேனர் என்ற பெயரும் உண்டு. முக்கியமாக சமண சமயத்தில் இருந்த இவரை மீண்டும் சைவத்திற்கு மாற்றிய பெருமை இவரது அக்கா திலகவதியாரையே சாரும்.

சம்பந்தரால் செல்லமாக அப்பர் என்று அழைக்கப்பட்டவர். இவர் செய்த அற்புதங்கள் ஏராளமானவை. சமணர்களால் சுண்ணாம்பு அறையில் ஏழு நாட்கள் பூட்டப்பட்டும் உயிர்தப்பியமை, சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பால் சோறு உண்டு உயிர் பிழைத்தமை, சமணர்கள் அவரை கல்லில் கட்டி கடலில் இட்ட போது அவர் அதை தோணி ஆக்கி மீண்டும் கரை சேர்ந்தமை, பாம்பு தீண்டிய சிறுவனை உயிர்ப்பித்தமை, இப்படியே பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நாவுக்கரசர் தனது 83 ஆவது வயதில் இறைவனடி சேரும் வரை, முன்னூற்று பதின்மூன்று பதிகங்கள் பாடினார். இவருடைய இத் தேவாரங்கள் யாவும் நாலாம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளன. சித்திரை மாதத்து சதயமே இவர் முக்தி அடைந்த நாளாகும்.

ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.